www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 6

தேர்வு எண் | | | | | | |

# மூன்றாம் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு (SA)- 2024-25

நேரம் : 2.00 மணி] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 60

பகுதி – I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 10X1=10

1. தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் குறிப்பிடும் நூல் -------
   அ) திருவாசகம் ஆ) திருக்குறள் இ) திரிகடுகம் ஈ) திருப்பாவை
2. சொல் வகையை அறிந்து பொருந்தாச் சொல்லைத் தேர்க
   அ) சென்றாள் ஆ) வந்த இ) சித்திரை ஈ) நடந்து
3. காந்தியடிகள் ------- அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்று விரும்பினார்.
   அ) நாமக்கல் கவிஞர் ஆ) பாரதிதாசன் இ) உ. வே. சாமிநாதர் ஈ) பாரதியார்
4. 'எளிதாகும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது -------
   அ) எளிது + தாகும் ஆ) எளி + தாகும் இ) எளிது + ஆகும் ஈ) எளிதா + ஆகும்
5. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல் -------
   அ) மனித வாழ்க்கை ஆ) மனித உரிமை இ) மனித நேயம் ஈ) மனித உடைமை
6. காரணப்பெயரைத் தேர்க
   அ) மரம் ஆ) வளையல் இ) சுவர் ஈ) யானை
7. வாழ்வில் உயர கடினமாக ------- வேண்டும்.
   அ) பேச ஆ) சிரிக்க இ) நடக்க ஈ) உழைக்க
8. மணிமேகலை கையில் இருந்த அமுதசுரபியில் உணவு இட்ட பெண் -------
   அ) சித்திரை ஆ) ஆதிரை இ) காயசண்டிகை ஈ) தீவதிலகை
9. எண், நதி ஆகிய இருபொருள்களைத் தரும் சொல் -------
   அ) திங்கள் ஆ) ஓடு இ) நகை ஈ) ஆறு
10. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க
    அ) ஒழுக்கம், உயிர், ஆடு, எளிமை ஆ) அன்பு, இரக்கம், ஐந்து, ஓசை
    இ) ஈதல், ஊக்கம், ஏது, ஔவை ஈ) ஓணான், ஆசிரியர், பழம், கிளி

பகுதி – II பிரிவு – I

**II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 4x2=8

11. காந்தியடிகளுக்குத் தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்திய நிகழ்வைக் கூறுக.
12. பழம், வேர் ஆகியவற்றின் இயல்புகள் யாவை?
13. ஈகை பற்றிய வள்ளுவரின் கருத்து யாது?
14. ஒருநாளும் விட்டுச் செல்லாதது எது?
15. அன்னை தெரசா கண்ணீர் விடக் காரணம் யாது?
16. அமுதசுரபியின் சிறப்பு யாது?

பிரிவு – II

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 5x2=10

17. சொற்களின் வகைகளை எழுதுக.
18. இடுகுறிப்பெயர் என்றால் என்ன?



Padasalai.Net
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

19. ஒலி வேறுபாடறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

மனம் – மணம்

20. உள்ளதை உள்ளவாறு கூறும் அணியின் பெயர் யாது?

21. கலைச்சொல் தருக.

அ) Lorry ஆ) Literature

22. வீட்டிலும் பள்ளியிலும் உன் பொறுப்புகள் இரண்டினை எழுதுக.

23. சொல் என்றால் என்ன?

**III. பின்வரும் மனப்பாடலை அடிபிறழாமல் எழுதுக.** 2+3=5

24. 'இன்னாசெய்' – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

25. அ) 'புல்வெளி யெல்லாம்' எனத் தொடங்கும் பாரதம் அன்றைய நாற்றங்கால் பாடலை எழுதுக.

**(அல்லது)**

ஆ) 'தம் உயிர்போல்' ........, 'எல்லாரும்'..... எனத் தொடங்கும் 'பராபரக் கண்ணி' பாடல்களை எழுதுக.

**IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.** 3x3=9

26. காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை எழுதுக.

27. மணிமேகலை மன்னரிடம் வேண்டியது யாது?

28. பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை?

29. நல்லவர் என்னும் பெயர் பெற நாம் என்ன செய்யலாம்?

30. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

1937 ஆம் ஆண்டு சென்னையில் இலக்கிய மாநாடு ஒன்று நடந்தது. அம்மாநாட்டுக்குக் காந்தியடிகள் தலைமை வகித்தார். உ.வே.சாமிநாதர் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்தார். உ.வே.சாமிநாதரின் உரையைக் கேட்ட காந்தியடிகள் மகிழ்ந்தார்.

**வினாக்கள்**

1. எந்த ஆண்டு இலக்கிய மாநாடு நடைபெற்றது?
2. காந்தியடிகள் ஏன் மகிழ்ந்தார்?
3. மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவர் யார்?

**V. விரிவாக விடையளிக்கவும்.** 3x6=18

31. அ) நூல்கள் அனுப்ப வேண்டிப் பதிப்பகத்தாருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) தேசிய ஒருமைப்பாடு என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

குறிப்புகள் : முன்னுரை – வேற்றுமையில் ஒற்றுமை – இந்தியர்களின் ஒற்றுமை – ஒருமைப்பாடு வளர்ப்போம் – முடிவுரை.

32. அ) அறச்செயல்களாக நீங்கள் எவற்றை எல்லாம் கருதுகிறீர்கள்?

**(அல்லது)**

ஆ) காந்தியடிகளிடம் காணப்படும் உயர்ந்த பண்புகளாக நீங்கள் கருதுபவை யாவை?

33. அ) பாதம் கதையைச் சுருக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) "முடிவில் ஒரு தொடக்கம்" என்ற தலைப்பின் காரணம் குறித்து எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com